# நிபந்தனையின்றி புலிகளுடன் சமாதான பேச்சில்லை

## — பிரட்மன் கூறுகிறார்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 8 இதழ் 39
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 21-3-1994

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கு விடுதலைப் புலிகள் தயாராயிருப்பதாக சிவதேச மகளிர் தினத்தையொட்டி திரு. பிரபாகரன் விடுத்த சமாதான அழைப்பை அரசு கவனத்தில் கொள்வதாக ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இத்துடன் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு அரசு ஏற்கனவே விதித்த பழைய நிபந்தனைகளையும் அவர் வலியுறுத்தினார். பேச்சுவார்த்தைகள் உயர்மட்டத்தில் மேற் [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - ராணுவம்

### திருமலையில் மோதல்

(கொழும்பு)

திருமலை மாவட்டம் தம்பலகாமத்தில் [illegible] ராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று மோதல் [illegible] ஏற்பட்டதாக பாதுகாப்பு [illegible] செய்திகள் [illegible]

கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளையில் பூநகரிப் பகுதியில் சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கை ஒன்றை படையினர் மேற்கொண்டதாகவும் அவ்விடத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டன.

(ஈ-சி)

பொதுசன நூலகம்
மாநகராட்சி
21-3-1994

# ★ சிங்களவர் தாக்கலாம்

# 2,000 தமிழர் பாதுகாப்பு தேடி

# கொழும்புக்கு இடம்பெயர்வு

## - புத்தளத்திலிருந்து சென்றனர் -

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் தமிழ்மக்கள் மீது சிங்களவர் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தால் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் பாதுகாப்புத் தேடிக் கொழும்புக்குச் சென்றுள்ளதாக ஏ. எப். பி. செய்தி தெரிவித்துள்ளது.

புத்தளம் குதிரைமலைக் கரையை அடுத்த இப்பகுதியில் துர்ச்சனராம. கடற்பகுதியில் நடந்த புதன் ஏதும் அசம்பாவிதங்கள் தமது வீடுவாசல்களில் கிழமை இனந்தெரியாதோர் தமக்கு எதிராக மேற்கொள் உடைமைகளை அப்படியே நடத்திய தாக்குதலில், 22 ளப்படலாம் என்றே மேற்படி விட்டுவிட்டு, இலங்கை அகதி சிங்கள மீனவர்கள் உயிரிழந் தமிழர்கள் இடம் பெயர்ந்

(4ம் பக்கம் பார்க்க)

## மேலும் 6 சடலங்கள் கரையொதுங்கின

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை புத்தளம் குதிரைமலைப் பகுதியில் வாணுவ போனதாகக் கருதப்படும் மேலும் 6 சிங்கள மீனவர்களின் சடலங்கள் நேற்று இப்பகுதியில் கரை யொதுங்கியதாக இரேஷ்ட ராணுவ அதிகாரி ஒருவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் சகல பகுதியிலும் பாதுகாப்பு தீவிரமடைகிறது

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகளை செயலகம் கோரியுள்ளது. சந்தேகத்திற்கிடமான நபர்களின் நடமாட்டங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் எச்சரித்துள்ளது.

தகவல் தெரிவிப்போர் தொடர்பு கொள்வதற்காக ராணுவ தலைமைப்பீடத்தின் 5 தொலைபேசி இலக்கங்களும் பொலிஸ் திணைக்களத்தின் 4 தொலைபேசி இலக்கங்களும்

பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

தெற்கில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் கருத்தில் கொண்டே இத்தகைய எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்.

-ஈ

## கொலைஞர் படைக்கு உதவி; பொலிஸார் மீது நடவடிக்கை?

(மட்டக்களப்பு)

ஏறாவூர் காத்தான்குடி வாக்களிப்பு நிலையங்களில் உள்ளூராட்சித் தேர்தலின் போது முறைகேடுகள் இடம்பெற்றதென தெரிவிக்கப்படுகிறது. இதுபற்றி மட்டக்களப்பு அரசாங்க அதிபரும், தேர்தல் ஆணையாளரும் தனித்தனி விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வாக்களிப்பு நிலையங்களில் கொலைஞர் குழுவைச் சேர்ந்தவர்கள் உட்புகுந்து 4000க்கும் மேற்பட்ட வாக்குகளை போட்டுக் கள்ளவாக்கு என்று குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமாயின், கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் மீது தேர்தல் சட்டத்தின் மூலம் வழக்குத் தொடரப்படும் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தப் பொலிஸாருக்கும் கொலைஞர் படைக்கு ஆதரவு தெரிவித்ததாகவும் என்றும் பொலிஸார் மீது குற்றச்சாட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

-ம-சி

## மதில் துணைவேந்தராக பேராசிரியர் குணரட்ணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தராக பேராசிரியர் பா. க. குணரத்தினம், பல்கலைக்கழக மாணவியக் குழுப் பேரவையினால் பிரேரிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனம் ஏப்ரல் மாதம் முதல் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது. இவரது நியமனத்தை ஜனாதிபதி உறுதிப்படுத்திய பின்னர் இவரது நியமனம் நிரந்தரமாக்கப்படும் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் பௌதிகத்துறையின் இரேஷ்ட பேராசிரியரும், பௌதிகத் துறையில் முதன்மை தரத்தைப் பெற்றவரும், பௌதிகத் துறைத் தலைவராகவும், கணனி விஞ்ஞானத் துறைத் தலைவராகவும் பணியாற்றிய இவர், பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினருமாவர்.

## மாதகல் இராணுவம் சூடு; ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மாதகல் இராணுவத்தினர் நேற்றுச் சூடு மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில், வீமன்காமத்தைச் சேர்ந்த ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

ஆனைக்கோட்டையிலிருந்து நேற்று காலை மீனவர்கள் [illegible]

(4ம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவுக்கு தங்கவாள் விருது

(யாழ்ப்பாணம்)

தேசிய தலைவர் வே. பிரபாகரனுக்கு தங்கவாள் விருதும், பாமாலையும் அளிக்கப்படவுள்ளது.

ஒட்டுசுட்டான் நெற்களஞ்சிய அபிவிருத்தி நிறுவனம் கவிஞரவுச் சங்கத் தினால் வழங்கப்பட்ட இப்பரிசு எதிர்ரி மடுவில் உள்ள தேசியத் தலைமையகத்தில் நடந்த புதன்கிழமை மாலை வழங்கப்பட்டது.

சங்கத் தலைவரால் தேசிய தலைவருக்கு சமர்ப்பிக்கவென

(4ம் பக்கம் பார்க்க)

## ஒழுங்கான தேர்தல் நடக்க பௌத்தபிக்குகள் கோரிக்கை

(கொழும்பு)

தென்மாகாண சபைத் தேர்தலை பொலிஸாரும் அரசு அதிகாரிகளும் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்துமாறு வேண்டுமென பௌத்த மதத் தலைவர்கள் முன்னணி ராணுவ தலைமைகளும் கூட்டாக அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளனர்.

இத்தேர்தலில் அதிகபட்ச மோசடிகள், வன்முறைகள் இடம்பெறலாமென செய்திகள் பல

(4-ம் பக்கம் பார்க்க)

